# திஹகொட பிரதேச சபை

# மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 04 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 திசெம்பர் 05 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 அக்டோபர் 08 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திஹகொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரினால் சபை அமர்வுப் படி மீளளிப்பு செய்யும் போது அங்கத்தவர்களுக்கு வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்களுக்கான கடன் தவணை என அறவிடப்பட்டிருந்த ரூபா 337,480 இற்கான தொகையினை மீளாய்வாண்டிற்கான வருமான உதவிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு சம்பளங்கள் மற்றும் படிகள் செலவுகளுக்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து 2014 திசெம்பர் மாதத்திற்கான பதவியணி சம்பளம் மற்றும் சபை அமர்வுப் படி ஆக முறையே ரூபா 1,128,500 உம் மற்றும் ரூபா 116,270 ஆக வழங்கியிருந்த ரூபா 1,244,770 தொகையினை மீளாய்வாண்டிற்கான வருமான உதவி வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டிற்கான உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 39,412 தொகை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்த வேண்டிய ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப் பெறுமதியை செலுத்தப்படாத சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரினால் 2014 ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மற்றும் திசெம்பர் மாதங்கள் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 32,307 இற்கான

ஆதனக் கடன் வட்டியினை பெற வேண்டிய பலவின முற்பணங்கள் (ஆதனக் கடன் வட்டி) கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 செப்டம்பர் மாதம் பொது கணக்கில் இருந்து நிர்மாண வேலைக் கணக்கிற்கு ரூபா 600,000 தொகை மாற்றப்பட்டிருந்ததுடன், அத் தொகை மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மகநெகும கிராமிய பாதைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 4,369,291 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) 2011 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 46,704 தொகையொன்று மீளாய்வாண்டிற்கான போக்குவரத்து தொடர்பாடல் தேவைகள் மற்றும் ஏனைய சேவைகள் செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 609 கொண்ட பலவின வழங்கல்கள் செலவுத் தலைப்பு தொடர்பாக ரூபா 256,762 தொகை ஒன்று செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 236,762 ஆகும். அதன் பிரகாரம் பலவின வழங்கல்கள் கடன்கொடுத்தோர் ரூபா 20,000 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,008,606 இற்கான தொகை ஒன்று மூலதனச் செலவுகள் (309) செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்க வேண்டிய இருந்த போதிலும் அத் தொகையினை 109 செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் செலுத்தப்பட்ட வாகன வாடகை ரூபா 47,500 தொகையினை மூலதனச் செலவுகள் செலவுத் தலைப்பு 109 இற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) சேதன பசளை கட்டிட நிர்மாண வேலையின் பெறுமதி ரூபா 1,093,472 தொகை எனினும், உடன்பட்டிருந்த பெறுமதியாகிய ரூபா 1,175,497 இற்கான தொகையினை மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 82,025 இற்கான தொகையொன்றினை மிகையாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

(ஔ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்தில் பில் பத்திரங்களின் பிரகாரம் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை என ரூபா 1,527,569 தொகை ஒன்று செலுத்த வேண்டியிருந்த போதிலும் அத் தொகையினை ஐந்தொகையில் காட்டியிருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டின் போது 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,082,923 ஆக காணப்பட்டதுடன் துணைப்பதிவேடு/ பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,848,324 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 1,234,599 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 தொங்கல் கணக்குகள்

---------------------------------------

பல வருட காலமாக முன் கொண்டு வரப்பட்டு காணப்படும் தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 2,382,841 இற்கான செலவு மீதியினை இவ் வருடத்திலும் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 65,860,726 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 994,278 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

ரூபா 20,656,481 தொகை பெறுமதியான கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீட்டு அறிக்கைகள், ரூபா 102,562,514 பெறுமதியான கடன்பட்டோருக்கான பட்டோலைகள் ரூபா 2,053,830 பெறுமதியான கடன்கொடுத்தோர் தொடர்பான பட்டோலைகள் மற்றும் ரூபா 75,668 தொகை பெறுமதியான முற்பணங்கள் தொடர்பான பதிவேடுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நாட்குறிப்பு 11 மற்றம் 62 தொடர்பாக திரண்ட நிதியத்திற்கு வரவு மற்றும் செலவு வைக்கப்பட்ட குறிப்புக்கள் தொடர்பான சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) விதி 218 | சபையினால் பயன்படுத்தப்படும் மற்றும் வதிவதற்கு எடுக்கப்படும் அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 திகதி இலக்கம் ஐஏஜ/2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,948,304 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,548,957 ஆகும்.

சபையின் மீளாய்வாண்டிற்கான தொழில்சார் மற்றும் சுயமாக உருவாக்கிய வருமானம் ரூபா 16,412,884 ஆகக் காணப்பட்டதுடன், அவ் வருமானத்தில் இருந்து ஆண்டின் போது பதவியணி சம்பளங்கள் படிகள் மற்றும் ஏனைய படிகள் செலுத்துவதற்காக ரூபா 14,263,455 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவ் வருமானத்தில் சம்பளங்கள் மற்றும் படிகள் செலவு சுமார் நூற்றிற்கு 86 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

---------------------------------

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

----------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி மற்றும் ஏக்கர் வரி | 281 | 2 | 18 |
| வாடகை | 1,435 | 1,340 | 209 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,025 | 3,936 | 43 |
| ஏனைய வருமானங்கள் | 29,680 | 49,542 | 277 |

#### 2.2.2 ஏக்கர் வரி

------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 21,364 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் ஆண்டிற்கான கட்டணம் மற்றும் தண்டப் பணம் பில் போடப்பட்டவைகள் ரூபா 2,564 ஆகும். ஆண்டின் போது முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,081 தொகை ஒன்றும் இவ்வாண்டு தொடர்பாக ரூபா 1,497 தொகை ஒன்றும் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 18,350 ஆகும்.

#### 2.2.3 வாடகை

--------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 326,115 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் ஆண்டிற்கான தண்டப் பணத்துடன் பில் போடப்பட்டவைகளின் பெறுமதி ரூபா 1,007,632 ஆகும். ஆண்டின் போது முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 54,414 தொகை

மற்றும் ஆண்டு தொடர்பாக ரூபா 1,006,949 தொகை ஆக ரூபா 1,061,363 தொகை ஒன்று கிடைத்திருந்தமையல் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 272,424 தொகை நிலுவையாக காணப்பட்டது. எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிலுவை மீதி ரூபா 209,425 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 62,999 இற்கான வித்தியாசமொன்று தோற்றக் கூடியதாக இருந்தது.

2.2.4 நீர் வரி

-----------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 252,973 ஆக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான தண்டப் பணத்துடன் பில் போடப்பட்டவைகள் ரூபா 350,816 ஆகும். ஆண்டின் போது அறவிடப்பட்டவை ரூபா 364,603 ஆகும். அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 239,186 ஆகும்.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | ரூபா. |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 174,473 |
| முத்திரைக் கட்டணம் | 62,424,654 |

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | - | - |
| மூன்றாம் தரம் | 01 | 02 | - | 01 |
| இரண்டாம் தரம் | 16 | 19 | - | 03 |
| ஆரம்ப தரம் | 26 | 21 | 05 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | 02 | 07 | - | 05 |
| | 46 | 50 | 05 | 09 |

2002 ஜனவரி 03 திகதிய இலக்கம் 14 கொண்ட திறைசேரிச் செயலாளரின் முகாமைத்துவச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் மற்றும் 2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் முகாமைத்துவச் சேவை சுற்று நிருபத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறேதேனும் அடிப்படையாக மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் பிரதேச சபை 2014 ஆண்டின் போது அங்கீகாரம் இன்றி ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஊழியர் 50 பேருக்காக சபை நிதியத்தில் இருந்து சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

--------------------------------

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக கணிசமான அறவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீட்டு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்